<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

<u>அசல் வழக்கு எண். 65/2022</u>

பெயர் : சம்பந்தம் P.W.2.

த/பெ. : நாராயணசாமி

தேதி : 21.07.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை:</u> –

1. நான் தில்லையாடி வாடி தெருவில் வசித்து வருகிறேன். எனக்கு பிரதிவாதிகளை தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகளின் தகப்பனார் தெட்சிணாமூர்த்தியையும் அவரது சகோதரர்கள் ஜெயராமன் மற்றும் பாலசுந்தரம் ஆகியோரை தெரியுமா என்றால் தெரியாது. தன்ராஜ் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். தற்போது அவர் எங்கு வசித்து வருகிறார் என்றால் கோட்டுச்சேரியில் வசித்து வருகிறார். தாவா சொத்தை தன்ராஜ் என்பவர் யாரிடமிருந்து வாங்கினார் என்று தெரியுமா என்றால் தெரியாது.

2. செக்கடி தெருவிற்கு நான் சென்றுள்ளேனா என்றால் இல்லை. செக்கடி தெருவிற்கும் வாதி தெருவிற்கும் இடையே சுமார் 2 கிமீ துூரம் இருக்கும் என்றால் சரிதான். தில்லையாடியில் வாதி ரெத்தினகுமாரின் தகப்பனாருக்கு நிறைய சொத்துகள் உள்ளது என்றாலும், அதை வாதியின் தகப்பனார் இறந்த பிறகு வாதிதான் கவனித்து வருகிறார் என்றால் சரிதான். வாதியின் தகப்பனார் எப்போதுஇறந்தார் என்றால் 8 வருடங்களுக்கு முன்னர் இறந்தார். வாதிக்கு தில்லையாடி அல்லிகுட்டை தெருவில் வீடு உள்ளது என்றால் சரிதான். வாதி சென்னையில் நிரந்தரமாக தங்கி தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான்.அவ்வப்போது தாவா கிராமத்திற்கு வந்து செல்வார். வாதியின் அல்லிக்குட்டை தெருவில் உள்ள வீட்டை நான் கவனித்து வருகிறேன் என்றால் சரியல்ல. அந்த வீட்டை சுமார் 8 வருடமாக அவர் வாடகைக்கு விட்டுள்ளார்.

3. நான் சாட்சி கையொப்பம் போட்ட பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. எவ்வளவு ரூபாய்க்கு மேற்படி சொத்து கிரயம் பெறப்பட்டது, எப்போது எழுதப்பட்டது, எப்போது பதிவு செய்யப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் பொறையார் சார் பதிவாளர் அலுவகத்திற்கு சென்று தான் கையொப்பம் போட்டேன். நான் ஒரு கையொப்பம் தான் செய்தேன். என்னுடன் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் மயிலாடுதுறையை சேர்ந்த ராமச்சந்திரன் என்பவர் கையொப்பம் செய்தார்.

4 செல்வி என்பவர் இந்த வழக்கில் என்ன கட்சி செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. தன்ராஜ் என்பவருக்கு முன்னர் தாவா சொத்து யார் வசம் இருந்தது, யாருக்கு பாத்தியப்பட்டதாக இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தன்ராஜ் தாவா சொத்தை எப்போது வாங்கினார் என்ற விபரமும், ஜானகி எப்போது கிரயம் பெற்றார் என்ற விபரமும், இருவரும் எவ்வளவு காலம் அனுபவித்து வந்தார்கள் என்ற விபரமும் தெரியுமா என்றால் தெரியாது.

5. வாதிக்கு நான் நெருக்கமானவர் என்பதாலும், அவரது சொத்துகளை நான் பராமரித்து வருவதாலும், வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**